மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஐ) தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு பல்கலைக்கழகங்கள் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் "ஆம்" என்க. (ஆம்)

மறுப்போர் "இல்லை" என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. R.S. ராஜகண்ணப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவை பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

(ஒ) தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றச் சட்டமுன்வடிவு, 2024

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2024 ஆம் ஆண்டு தமிழ்நாடு மாநில மருத்துவ மன்றச் சட்டமுன்வடிவு, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*